# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 03 வியாழன் 17.06.2021 மலர் - 2, இதழ் - 72


## தமிழகத்திற்கு நிதி அதிகரிப்பு

மத்திய அரசு வரும் 2024ம் ஆண்டிற்குள் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான 'ஜல் ஜீவன்' திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் தமிழகத்திற்கு கடந்த 2020 2021ம் நிதியாண்டில் 924.99 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், அதில் 544.51 கோடி ரூபாயை மட்டுமே மாநில அரசு பயன்படுத்தியது. தற்போது அந்த நிதியை நான்கு மடங்கு உயர்த்தி 3,691.21 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது மத்திய அரசு. ஜல் ஜீவன் மிஷன் தொடங்கப்படும் முன் தமிழகத்தில் உள்ள 1.26 கோடி வீடுகளில், வெறும் 21.65 லட்சம் வீடுகளில் மட்டுமே குழாய் நீர் இணைப்பு இருந்தது. ஆனால், ஜல் ஜீவன் துவங்கப்பட்ட பிறகு கடந்த 22 மாதங்களில், 18.70 லட்சம் குடும்பங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை மேலும் விரைவுபடுத்த, திட்டம் செயல்படுத்தப்படும் வேகத்தை தமிழக அரசு 179 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.



## பால கலா உற்சவம்

மே16 முதல் மே 23 வரை விஜயபாரதம் மற்றும் பாலபாரதி இரண்டு அமைப்புகளும் திருவிழாக்கோலம் பூண்டது. இந்த அமைப்புகள் நடத்திய குழந்தைகளுக்கான ஆன்லைன் போட்டிகளில் சுமார் 735 குழந்தைகள் பதிவு செய்து கொண்டனர். அதில், 500 குழந்தைகள் வரை இணையதளம் மூலமாக பங்கேற்றனர். 50 குழந்தைகள் பல்வேறு போட்டிகளில் பரிசுகள் வென்றார்கள். பாடல், சுலோகம், கதை சொல்லுதல், கேள்வி பதில், சித்திரம் தீட்டுதல் என்று பிரமாதப்படுத்திவிட்டார்கள் பெற்றோர்களும் பிள்ளைகளும். இது போன்ற நிகழ்ச்சிகள் தனியாக ஈராண்டுகளாக பாலபாரதி நடத்தி வந்தாலும் இந்த முறை இதில் விஜயபாரதமும் இணைந்து நடத்தியது. விவேகானந்த வித்யாலயா பள்ளிகளும் இணைந்ததால் திருவிழா போல ஆனது. அடுத்தமுறை நடக்கும்போது நீங்களும் உங்களுக்கு தெரிந்த பிள்ளைகளை சேர்த்துவிட்டு அவர்களது தனித்திறமை வெளியாக உதவலாமே?

ஆனந்த் வெங்கட்.



## ஐ.எஸ்.ஐ.எஸ். குற்றவாளிகள் விசாரணை

சட்டவிரோத நடவடிக்கை, வெடிகுண்டு பொருட்கள் வைத்திருந்தல் போன்ற சட்டத்தின் கீழ் கேரளா மாநிலத்தை சேர்ந்த சையத் அலி என்ற நபர் மீது தேசிய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏ, பூந்தமல்லி நீதிமன்றதில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. கடந்த 2019ல் போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தி சிம் கார்டுகளை வாங்கி மோசடி, பயங்கரவாத சதி செயல்களில் ஈடுபட்ட சையத் அலி உட்பட பல முஸ்லிம் பயங்கரவாதிகளை காவல்துறையினர் கைது செய்தனர். விசாரணையில் இந்த சிம் கார்டுகள் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளான லியாகத் அலி மற்றும் கஜா மொய்தீனிடம் வழங்கபட்டதும், அவர்கள் அதனை பயன்படுத்தி பயங்கரவாத செயல்கள், நிதி திரட்டுதலில் ஈடுபட்டது கண்டறியப்பட்டது. இதனை அடுத்து அவர்கள் மீது என்.ஐ.ஏ குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து விசாரித்து வருகிறது.

## காவிரித் தாய்க்கு வரவேற்பு


குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து கடந்த 12ல் முதல்வர் ஸ்டாலினால் காவிரி தண்ணீர் திறந்து விடப்பட்டது. காவிரி நீர் திருச்சி, ஸ்ரீரங்கத்தை வந்தடைந்தது. காவிரி தாயை வரவேற்கும் முகமாக பாரதீய கிசான் சங்கம் சார்பில் விசேஷ பூஜையும் ஆரத்தியும் நடைபெற்றது. குறுவை சாகுபடி சிறப்பாக நடைபெறவும். விவசாயிகள் மகிழ்ச்சியடையவும் வழிபாடு செய்யப்பட்டது. பாலசுந்தரம் மாநில செயலாளர் பாரதீய கிசான் சங்கம்.

## பகவதி அம்மன் பிரசன்னம்



மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலில் துணை தேவதை மண்ணில் புதைந்திருப்பது தேவபிரசன்னம் மூலம் கண்டுப்பிடிக்கப்பட்டது. பெண்களின் சபரிமலை என்று புகழப்படும் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து ஜோதிடர் ஸ்ரீநாத், விஷ்ணு நம்பூதிரி ஆகியோர் தேவபிரசன்னம் பார்க்க, தீ விபத்திற்கு அம்மனின் கோபமே காரணம் என்றும் அதற்கான பரிகாரங்களும் கூறப்பட்டன. மேலும், கோயிலில் தேவியுடன் ஒரு யக்ஷி துணை தேவதை தெரிவதாகவும், அதற்கும் சன்னதி அமைத்து பூஜை நடத்த வேண்டும் என்றும் தெரியவந்தது. அவ்வாறு இல்லை என தேவசம்போர்டு அதிகாரிகள் மறுத்தனர். அந்த சிலை இருக்கும் இடத்தை பிரசன்னம் பார்த்தவர்கள் கூற, அங்கு மண்ணுக்குள் தோண்டியபோது சிலை கண்டெடுக்கப்பட்டது. இதனை அடுத்து, சன்னதி அமைக்கும் பணிகள் விரைவில் துவங்க உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹால் மார்க் கட்டாயம்




தங்க நகைக்கு 'ஹால் மார்க்' முத்திரை கட்டாயம் என மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அமைச்சர் பியுஷ் கோயல், தங்க நகை விற்பனையாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதில், நாடு முழுவதும் முதற்கட்டமாக 256 மாவட்டங்களில் 'ஹால் மார்க்' முத்திரையை கட்டாயமாக்க முடிவு எடுக்கப்பட்டது. இனி 'ஹால்மார்க்' முத்திரை கொண்ட 14, 18, 22 காரட் தங்க நகைகள் மட்டுமே விற்க வேண்டும், என முடிவு செய்யப்பட்டது.

# முதல்வரை மிரட்டும் உதயகுமார்



சுப. உதயகுமாரன், முதல்வர் ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஆர்.எஸ்.எஸ் ஒரு தீவிரவாத அமைப்பு என்றும் அதன் துணை நிறுவனமான சேவாபாரதியின் கொரொனா மீட்பு பணியின் ஒரு பகுதியாக துவக்கிய 'இலவச கோவிட் கேர் சென்டர்' திறப்பு விழாவில் அமைச்சர்களும் அதிகாரிகளும் பங்கேற்றதை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார். மேலும், 'உங்கள் கட்சியின் ஈழப் பிரச்சினை நிலைப்பாடு, வாரிசு அரசியல் போன்றவை எங்களுக்கு ஏற்புடையவை இல்லை. உங்கள் கட்சியும், அரசும் தடுமாறினால் கடுமையாக எதிர்ப்போம்.' என்று விமர்சித்திருக்கிறார். தேசமெங்கும் தங்களுடைய உயிரை பணயம் வைத்து கொரோனா நிவாரண சேவைகள் செய்து வரும் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதியின் பணிகளை மக்கள் அறிவார்கள். இந்நிலையில், கூடங்குளம், தூத்துக்குடி கலவரங்கள், வெளிநாட்டு நிதி மோசடி உட்பட சுமார் 160க்கும் மேற்பட்ட வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவரான சுப. உதயகுமாரன், ஆர்.எஸ்.எஸ் அமைப்பை குற்றம் சொல்ல சிறிதும் லாயக்கற்றவர் என்பதுடன் ஒரு முதல்வரையே மிரட்டும் தொணியில் பேசியிருப்பது கண்டிக்கத்தக்கது.

# டுவிட்டரின் சட்டம் பாதுகாப்பு நீக்கம்



பாரதத்தில் கடந்த மே 25 முதல் புதிய தகவல் தொழில்நுட்ப விதிமுறைகள் அமலுக்கு வந்தன. இந்த விதிமுறைகளுக்கு உட்படுவதாக அனைத்து சமூக வலைதளங்கள் சம்மதம் தெரிவித்தன. ஆனால், டுவிட்டர் மட்டும் முரண்டுபிடித்தது. மத்திய அரசு விடுத்த இறுதி எச்சரிக்கையை அடுத்து கூடுதல் கால அவகாசம் கேட்டது டுவிட்டர் நிறுவனம். அவகாசம் வழங்கப்பட்டும் புதிய விதிகளை டுவிட்டர் இதுவரை ஏற்கவில்லை. இதனால், சமூகவலைதளங்களுக்கு பாரதத்தில் வழங்கப்பட்டு வரும் சட்டப் பாதுகாப்பை டுவிட்டர் இழந்துள்ளது. இதனால் பயனாளர்கள் பதிவிடும் சர்ச்சைக்குரிய விஷயங்களுக்கு பயனர்கள் மட்டுமல்லாமல், இனி டுவிட்டரும் பொறுப்பாகிறது. சட்டரீதியிலான நடவடிக்கைகளை பயனர்களுடன் இணைந்து இனி டுவிட்டரும் சந்திக்க நேரிடும். இதனையடுத்து, உ.பி.,யில் முஸ்லிம் நபரை தாக்கப்படும் ஒரு போலி வீடியோவை டுவிட்டர் நிறுவனம் நீக்காததால், அந்நிறுவனத்தின் மீது உ.பி காவல்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது. மேலும், சமூக ஊடக தளங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க டுவிட்டர் நிர்வாகத்துக்கு பார்லிமென்ட் நிலைக்குழு, சம்மன் அனுப்பியுள்ளது.

# பா.ஜ.க. கவுன்சிலரின் துரித நடவடிக்கை



கேரளா வடகரை ரயில் நிலையத்தின் அருகில் தண்டவாளத்தில் ஒரு தென்னை மரம் விழுந்து கிடப்பதாக இரவு 8 மணிக்கு அப்பகுதி பா.ஜ.க கவுன்சிலர் பி.கே சிந்துவுக்கு தகவல் வந்தது. இதனையடுத்து அதி விரைவாக செயல்பட்டு டார்ச் லைட், சிகப்பு துணிகளுடன் சென்று அப்பக்கமாக வந்த மங்களூர் செல்லும் மாவேலி எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்தினார். தன்னுடன் வந்தவர்களைக் கொண்டு அதிவேகமாக மரத்தை வெட்டி அகற்றியும்விட்டார். அவரது துரித நடவடிக்கையின் காரணமாக மிகப்பெரிய ரயில் விபத்து தவிர்க்கப்பட்டதுடன் ரயிலும் அரைமணி நேரத்தில் அனுப்பி வைக்கப்பட்டது.

# ராணுவ தடவாள போக்குவரத்து

தேசத்தின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் பிரத்யேக சரக்கு வழித்தடத்தை இந்திய ரயில்வே சமீபத்தில் உருவாக்கியது. இதனால் சரக்குப் போக்குவரத்தை விரைவாக மேற்கொள்ள முடியும். பாதுகாப்பு படைகளின் போக்குவரத்து திறன், தயார் நிலையை அதிகரிக்க, பிரத்யேக சரக்கு ரயில் வழித்தட கார்ப்பரேஷன், இந்திய ரயில்வே மற்றும் இந்திய ராணுவத்துக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டது.



இதையடுத்து, இந்த பிரர்த்தியேக சரக்கு ரயில் வழித்தடத்தில், ரயிலில் ராணுவ வாகனங்கள், தளவாடங்களை அனுப்பி இந்திய ராணுவம் சோதனைகள் மேற்கொண்டது. இது வெற்றிகரமாக நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொய் செய்திக்கு எதிராக வழக்கு

உத்தர பிரதேசம் காஜியாபாத்தில், 'அப்துல் சமத் சைஃபி என்பவர், 'ஜெய் ஸ்ரீராம்' கோஷமிடாததால் அவரை பர்வேஷ் குர்ஜார், ஆரிஃப், ஆதில், முஷாஹித் ஆகியோர் தாக்கினர்' என போலி செய்திகளை பரப்பப்பட்டது. விசாரனையில் அது, தனிப்பட்ட மோதல் என்பதும், அங்கு 'ஜெய் ஸ்ரீராம்' என்ற கோஷம் குறித்த சர்ச்சை நடைபெறவில்லை என்பதும் தெளிவானது. மேலும் இது குறித்த 2வது வீடியோ சமாஜ்வாடி கட்சித் தலைவர் உமேத் இத்ரிஸ் வீட்டில் படமாக்கப்பட்டது என்றும் கண்டறியப்பட்டது. இதனால் திட்டமிட்டே போலி செய்திகளை வெளியிட்ட டுவிட்டர், தி வயர் செய்தி நிறுவனம் மற்றும் முஹம்மது ஜுபைர், ராணா அயூப், சபா நக்வி, காங்கிரஸ் தலைவர்கள் மஸ்கூர் உஸ்மானி, ஷாமா முகமது மற்றும் சல்மான் நிஜாமி ஆகியோருக்கு எதிராக உத்தரபிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.



## சாமி சிலைகள் உடைப்பு



பீகாரில் பெட்டியா என்ற பகுதியில் உள்ள ஸ்ரீராமர் கோயிலில், அடையாளம் தெரியாத சிலர் அங்கு வைக்கப் பட்டிருந்த ராமர், சீதை சிலைகளை உடைத்துள்ளனர். இதனால் அங்கு பதட்டம் ஏற்பட்டுள்ளது. கோயில் முன்பு திரண்ட பொதுமக்கள், குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தி சாலை மறியல் செய்தனர். அப்பகுதியில் சமூக விரோதிகளின் நடமாட்டம் குறித்து புகார் அளித்தும் காவல்துறை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என கோயில் அர்ச்சகர் தெரிவித்துள்ளார். ஒரு தனிக்குழு அமைத்து விசாரிக்கப்படுவதாகவும் குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் எஸ்.டி.பி.ஓ முகுல் பரிமல் பாண்டே தெரிவித்துள்ளார்.

## ஹமாசுக்கு பதிலடி



பாலஸ்தீனிய ஹமாஸ் பயங்கரவாதிகள், தெற்கு இஸ்ரேல் பகுதியில் வெடிபொருட்கள் கொண்ட பலூன்களை அனுப்பி தாக்கியதை அடுத்து, நேற்று காசா பகுதியில் இஸ்ரேலிய விமானப்படை வான்வழித் தாக்குதல்களை நடத்தி தக்க பதிலடி கொடுத்தது. மேலும், பாலஸ்தீனத்தில் இருந்து வரும் எந்த தாக்குதல்களையும் எதிர்கொள்ளவும் தக்க பதிலடி தரவும் தயாராக உள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

## சீனாவுக்கு எதிரான மற்றொரு ஆதாரம்



சீனாவில் உள்ள வூஹான் ஆய்வு கூடத்தில் இருந்து, கொரோனா வைரஸ் பரவியதாகவும் அதி திட்டமிட்டே பரப்பப்பட்டதாகவும் உலக நாடுகள் கூறிவருகின்றன. இந்நிலையில், சீனாவின் வூஹான் ஆய்வுக் கூடத்தில் கூண்டுக்குள் உயிருடன் அடைக்கப்பட்டுள்ள வௌவ்வால்களுக்கு விஞ்ஞானிகள் புழுவை உணவாக கொடுக்கும் வீடியோ காட்சி வெளியாகி உள்ளது. உலக நாடுகளின் பொருளாதாரத்தை சீர்குலைக்க, சீனா திட்டமிட்டு கொரோனா வைரசை பரப்பியது, இது சீனா நடத்தியுள்ள உயிரி ஆயுத தாக்குதல் என்ற உலக நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்கு இந்த வீடியோ மேலும் வலு சேர்க்கிறது.

## பரதன் பதில்

*அண்டை மாநிலங்களில் கட்டுமான பொருட்களின் விலை எல்லாம் அப்படியே இருக்கும்போது தமிழகத்தில் மட்டும் அவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டதே, ஏழைகளின் வீடு கட்டும் கனவு இனி பலிக்குமா?*

**- வா. பிரேம்குமார், திருவான்மியூர்**

ஒவ்வொருமுறை தி.மு.க ஆட்சிக்கு வரும்போதும் விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதானே!

# சுகாதாரப் பணியாளர்கள் சுட்டுக்கொலை



ஆப்கனின் நங்கர்ஹர் மாகாணம் கோக்யானி மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து போடும் பணியாளர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 2 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். சுர்க்ரோட் மாவட்டத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். ஜலாலாபாத்தில் 3 பணியாளர்கள் காயமடைந்தனர். வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட இந்த திட்டமிட்ட தாக்குதல்கள் தலிபான்களின் சதி என காவல்துறை கூறுகிறது. ஆனால் இத்தாக்குதலுக்கு தலிபான் பொறுப்பேற்க மறுத்துவிட்டது. இதனால், அங்கு போலியோ சொட்டு மருந்து போடும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 3 மாதங்களுக்கு முன்பும் ஜலாலாபாத்தில் 3 பெண் மருத்துவ பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற தாக்குதல்களை தடுக்கவும், குற்றவாளிகளுக்கு தண்டனை தரவும் அங்கு வழிமுறைகள் இல்லை, மேலும் அங்குள்ள தலிபான்களும் மதத் தலைவர்களும், கருத்தடை, தடுப்பூசி என அனைத்தும் மேற்கத்திய சதி என பழமைவாத கருத்துகளுடன் இன்றும் உள்ளனர் என்பது அங்குள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்களின் குற்றச்சாட்டு.

# வலையில் சிக்கிய மீம்கள்





# தடுக்கப்பட வேண்டிய கல்வி சாலை குற்றங்கள்

கல்வி கற்க செல்லும் குழந்தைகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளாகும் செய்திகள் வந்தவண்ணம் உள்ளது. இது அனைவருக்கும் வருத்தத்தை அளிக்கிறது. இந்த நாட்டில் கல்வி கற்றுக் கொடுப்பவர்களுக்கு என்று ஒரு தனி மரியாதை உண்டு. தாய், தந்தையருக்கு அடுத்த இடத்தில் வைக்கப்படும் அவர்கள் இளஞ் சிறார்கள் முதல் வயது வந்தவர்கள் வரை குறிவைக்கும்போது நெஞ்சம் கொதிக்கிறது.

இதில் இன்னும் அதிக வருத்தம் தருவது மத ரீதியாக அவர்கள் வேறாக இருந்தால் நடவடிக்கை எடுக்க அரசு அமைப்புகள் தயக்கம் காட்டுவது. யாராக இருந்தால் என்ன, குற்றம் இழைத்தவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் எந்த மதத்தினராக இருந்தால் என்ன? கடுமையான நடவடிக்கைகளை எடுத்தே தீரவேண்டும்.

கீழ்கண்ட இணைப்பில் பல ஆண்டுகளாக சென்னையில் பீட்டர்ஸ் சாலையில் இயங்கும் 'மியாசி ஆர்கிடெக்ச்சர் கல்லூரி'யில் பாலியல் வன்கொடுமைகள் நடப்பது புகார் அளிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மூடி மறைக்கப்படுகிறது என்று புகார்கள் எழுந்துள்ளன. தலைமை இடத்தில் இருக்கும் 70 வயதான அன்வர் ஷரீப், தூயவன் கிருஷ்ணன் என்ற இருவர் மீதும் புகார் தரப்படுகிறது. தவிர, அவ்வப்போது வந்து செல்லும் சாலமன் என்ற பேராசிரியர் மாணவிகளுக்கு ஆபாச படங்கள் அனுப்பிய புகாரும் எழுந்துள்ளது.

இந்த புகார் வந்த ஓரிரு நாட்களில் இந்த கல்வி நிறுவனம், முதல்வரை சந்தித்து கொரோனா நிவாரண நிதியளித்துள்ளது என்பது காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையா என எண்ணத் தோன்றுகிறது. புனித ஜார்ஜ் பள்ளியில் 2017ல் தந்த புகாருக்கு இப்போது ஏன் நடவடிக்கை என்று புரியவில்லை. இத்தனை நாட்கள் எல்லாரும் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? சிவசங்கர் பாபாவை கைது செய்ய அவசரம் காட்டும் காவல்துறை, விசாரணைக்கு நேரில் ஆஜராகாத அந்த ஆங்கிலோ இந்திய பள்ளி ஆசிரியர், நிர்வாகிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

மியாசி கல்லூரியை பற்றிய மொத்த புகாரும் கீழே உள்ள The Commune என்ற பத்திரிகையில் வந்துள்ளது. காம இச்சையுடன் அணுகும் எந்த மனிதரையும் எந்த பாகுபாடும் பாராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோள். https://thecommunemag.com/facultyofmeasiacademyofarchitectureaccusedofsexualharassment/

நமது நிருபர்



# ராஜமாதா ஜீஜாபாய்

**வீ**ரம் செறிந்த மராட்டிய மண்ணின் வீரர்கள், முகலாய மன்னர்களிடம் தளபதிகளாகப் பணியாற்றிய காலகட்டம். ஜீஜாபாயின் தந்தை ஜாதவ் ராவ் மொகலாயர்களின் பக்கம். கணவர் ஷாஹாஜி, நிஜாமின் பக்கம். இந்த சூழலில், நான்கு மாத கர்ப்பிணியான ஜீஜாபாய் தன் புகுந்த வீட்டுப்பக்கமே நின்றார். ஆனாலும், மராட்டியர்கள் சுய மரியாதையோடு, தமக்கென ஒரு ராஜ்ஜியத்தை உருவாக்கி சுயமாக ஆளவேண்டும் என்பதே அவரது லட்சியம்.

அதற்காக தனக்கொரு வீர மகன் பிறக்க வேண்டும் என பிரார்த்தித்தார். 1630 பிப்ரவரி 19ல் அவருக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு அவர் சூட்டிய பெயர் சிவாஜி. தன் மகனை மாவீரனாக்குவதற்கு உறுதி பூண்டார். சிவாஜிக்கு முதல் ஆசிரியரே அன்னைதான். சிறு வயதிலேயே ராமாயணம், மகாபாரதம், பாகவதத்திலிருந்து கதைகளைச் சொல்லி வீரத்தையும் அறநெறிகளையும் போதித்தார் ஜீஜாபாய்.

தக்க வயதில் சிவாஜிக்குப் போர்ப் பயிற்சி அளித்து வீரனாக்கினார். பதினாறு வயதில் சிவாஜி படையெடுத்துச் சென்று தோரங் கட் கோட்டையைக் கைப்பற்றியது அவரது இளமை வீரத்துக்கு எடுத்துக் காட்டு. இரவு முழுவதும், தான் இருந்த சிவநேரிக் கோட்டையிலிருந்து, சிங்கக் கோட்டையையே கண் அயராமல் கவனித்துக் கொண்டிருந்த ஜீஜாபாய் காலையில் கோட்டையின் மேல் சிவாஜி பறக்க விட்ட காவிக் கொடியைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

ஔரங்கசீப்பை, ஆக்ரா கோட்டையில் சந்திக்க சிவாஜி புறப்பட்டுச் சென்ற போது, நாட்டை தாயின் கைகளில் ஒப்படைத்துச் சென்றார். அங்கு சிவாஜியும், பேரன் சாம்பாஜியும் சிறை பிடிக்கப்பட்ட நெருக்கடி நிலையிலும் நாட்டைத் திறம்பட நிர்வகித்தார் ஜீஜாபாய்.

1664ல், சிவாஜியின் தந்தை இறந்தபோது, தாய் ஜீஜாபாய் அக்கால மரபுபடி உடன் கட்டை ஏற விரும்பினார். ஆனால், சிவாஜி, இந்த நாட்டுக்கு உங்கள் வழிகாட்டுதல் அவசியம் என எடுத்துச் சொல்லி தடுத்து நிறுத்தினார். 1674ல் தன் தாயின் ஆசியோடு அரியணையேறினார் சிவாஜி. ஆனால், விதி வலியது. மகனுக்கு முடி சூட்டப்பட்ட பன்னிரண்டாவது நாள் ராஜா மாதாவாக இருந்த ஜீஜாபாய் மறைந்தார்.

**ஜீஜாபாய் நினைவு தினம் இன்று**

ஜெ.எஸ். ஸ்ரீதரன்

# வானோர் புகழும் வாஞ்சிநாதன்



**வா**ஞ்சிநாதன் (1886 ஜூன் 17,1911) ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போராடிய தமிழகத்தை சேர்ந்த ஒரு புரட்சியாளர்.

திருநெல்வேலி செங்கோட்டையில், 1886ம் ஆண்டு பிறந்தவர். வாஞ்சிநாதனின் இயற்பெயர் சங்கரன் எனினும் இவர் வாஞ்சி என்றே அழைக்கப்பட்டார். வாஞ்சி பள்ளிப் படிப்பை செங்கோட்டையிலும், கல்லூரி படிப்பை திருவனந்தபுரத்திலும் பயின்றார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், புனலூர் காட்டிலாகாவில் பணியாற்றினார்.

ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்த்து நாடெங்கும் போராட்டம் உச்சகட்ட நிலையிலிருந்தது. வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு வாஞ்சியும் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமானார். வாஞ்சிநாதன், புதுவையில் புரட்சியாளர் வ. வே. சு. ஐயர் வீட்டில் தங்குவது உண்டு. அங்கு மகாகவி பாரதியாரையும் சந்திப்பார்.

காலப்போக்கில் தமது அரசுப் பணியில் இருந்து விலகிப் புரட்சிப் பாதையில் தீவிரமானார். எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியின் ரகசிய ரத்தப் புரட்சி பிரமாணங்களினால் வாஞ்சியின் மனம் மேலும் தீவிரம் அடைந்தது. 1911 ஜூன் 17 காலை 10.45 மணிக்கு மணியாச்சி ரயில் சந்திப்பில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரையை வாஞ்சி தனது துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு, அதே துப்பாக்கியால் தன்னையும் சுட்டு வீரவமரணம் அடைந்தார்.

வாஞ்சியின் பிரேத விசாரணையில், அவர் போட்டிருந்த உள்சட்டையில் இருந்த துண்டுக் கடிதத்தில் கலெக்டரைச் சுட்டுக் கொன்றதற்கான காரணங்களில் ஒன்றாக 'மிலேச்ச இங்கிலீஷ்காரர்கள் நம் அவர்கள் நம் பாரத நாட்டைக் கைப்பற்றியதோடு, ஹிந்துக்களின் சநாதன தர்மத்தை அழிக்கின்றனர்' என குறிப்பிட்டிருந்தார். மேலும், சென்னையில் 3,000த்திற்கும் மேற்பட்ட விடுதலை வேட்கையுடைய தீவிரவாதிகள் தன்னுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டு ஆர். வாஞ்சி ஐயர், செங்கோட்டை என்றெழுதி இருந்தது. திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமானது. செங்கோட்டையில் இவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு, டிசம்பர் 23, 2013 அன்று திறக்கப்பட்டுள்ளது.

**வீரன் வாஞ்சிநாதனின் நினைவு தினம் இன்று**

ப. கமலயாழினி